06.04.2026.

## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

## அசல் வழக்கு எண்.49/2023

## பி.வா.சா. 1–செல்வராணி, க/பெ பொன்னர்

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என் தகப்பனாருடன் பிறந்த சகோதரி என்றுசொன்னால் சரிதான். வாதியின் தாயார் என் தகப்பனாரையும் என்னையும் பிரதிவாதியாக காண்பித்து இந்த நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தொடுத்திருந்தாரா என்றால் இல்லை. வாதியின் தாயார் வேறு நீதிமன்றத்தில் ஏதாவது என்மீதோ, என் தகப்பனார் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியும். தாவா சொத்திற்கு கிழக்கு திசையில் எனக்கு நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கு திசையில் உள்ள எனது சொத்தை நீதிமன்றத்தின் மூலம் எனக்கு உத்தரவின் பேரில் கிடைக்கபெற்ற சொத்தா என்றால் அந்த சொத்து என் தகப்பனாருக்கு பாகபிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தாகும், நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கிற்காக எனது பாட்டிற்கு அதன் பிறகு கிடைக்கப்பெற்றது.

06.04.2026.

( வாதி வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை 16.04.2026 ம் தேதி இறுதி வாய்ப்பிற்காக ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.